| *அனுப்புநர் :* | *பெறுநர் :* |
|---|---|
| திரு.கோ. சுப்பிரமணியன்., | கண்காணிப்பாளர்அவர்கள், |
| செயல் அலுவலர், | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் |
| ஹைவேவிஸ் பேரூராட்சி, | தேனி மாவட்டம். |
| தேனி மாவட்டம். | தேனி. |

**ந.க.எண் : 78/2024 நாள் : 12.08.2024**

ஐயா,

பொருள் : தொழில் வரி சட்டம் – தேனி மாவட்டம் ஹைவேவிஸ் பேரூராட்சி – அரசு அலுவலக பணியாளர்கள், அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத தனியார் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் தொழில் வரிச்சட்டம் – 2024–2025ஆம் ஆண்டு முதல் அரையாண்டு தொழில்வரி – உரிய காலத்திற்குள் ஊதிய விவரங்கள் வழங்குதல் மற்றும் வரி செலுத்தல் – தொடர்பாக

பார்வை
1) தொழில்வரி மத்திய சட்டம் 59/1998
2) தமிழ்நாடு நகராட்சிகள் திருத்திய தொழில் வரி சட்டம் 1998
3) அரசாணைஎண் 11 நகராட்சிகள்நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 12.01.1999
4) தொடர்புடைய ஆவணங்கள்

******

பார்வை 1 மற்றும் 2இல் காணும் மத்திய மாநில அரசு , மற்றும் அரசு சார்ந்த / சாராத தொழில் நிறுவனங்கள் தனியார் தொழிற்சாலைகள். வணிகங்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் மாதாந்திர ஊதிய அடிப்படையில் தொழில்வரி சட்டதிருத்தின் படி பணியாளர்களின் அரையாண்டிற்கான மொத்த வருவாயை கணக்கீட்டு நிர்ணயிக்கப்பட்ட கட்டண விகிதசாரத்தின்படி தொழில்வரி பிடித்தம் செய்து உரிய உள்ளாட்சி நிறுவனங்களுக்கு செலுத்தப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இப்பேரூராட்சி பகுதிகளில் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள அலுவலகத்திற்கு தொழில்வரி திருத்திய சட்ட விதிகளின்படி தொழில்வரி நெறிமுறைகளை தவறாது கடைபிடிக்கப்படவேண்டுமென இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- தொழில்வரி திருத்திய சட்டபிரிவு 5(1) இன்படி ஒவ்வொரு நிறுவனங்களும் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் அலுவலர் (அ) ஊதியம் விநியோகம் செய்யும் அலுவலர் ஒவ்வொரு வருடம் உள்ளாட்சி நிறுவனங்களால் தெரிவிக்கும் தொழில்வரி அரையாண்டிற்கான கேட்பு தொகையினை ஆகஸ்ட் மற்றும் ஜனவரி மாத்தில் பிடித்தம் செய்து செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

- தொழில்வரி திருத்திய சட்டப்பிரிவு 5(2)(3) இன்படி ஒவ்வொருரையாண்டிற்கு பிடித்தம் செய்த கேட்பு தொகையினை காசோலைகள் , வங்கி உண்டிகள் மற்றும் ரொக்கமாக செப்டம்பர் மற்றும் பிப்ரவரி மாத 15 தினங்களுக்குள் செலுத்த தெரிவிக்கப்பபட்டுள்ளது.

- தொழில்வரி திருத்திய சட்டப்பிரிவு 6(1)(2) இன்படி ஒவ்வொரு நிறுவனம் தங்களது கட்டுப்பட்டிலுள்ள பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் அலுவலர் (அ) ஊதியம் விநியோகம் செய்யும் அலுவலர் தங்களது பணியாளர்களின் மாதாந்திர ஊதியப்பட்டியலுடன் மொத்த ஊதியத்தினடிப்படையில் ஆறு மாத ஊதிய வருவாயினை குறித்த தொகுப்பட்டியலுடன் கணக்கீட்டு அரையாண்டிற்கான தொகுப்பறிக்கை படிவம் ஒவ்வொரு வருடம் ஜுன் மற்றும் அக்டோபர் மாதத்தில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணைகள் மற்றும் சட்ட விதிகளின்படி இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் தொழில்வரி கீழ்காணும் பட்டியல் 1இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி தங்களது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2024–2025ஆம் ஆண்டு முதல் அரையாண்டுக்குரிய தொழில் வரியினை ஊதியத்தில் பிடித்தம் செய்து ஹைவேவிஸ் பேரூராட்சிக்கு செலுத்தி உரிய இரசீது பெற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பட்டியல் – 1

| வ.எண் | சராசரி அரையாண்டிற்கான வருவாய் | செலுத்தப்படவேண்டிய தொழில்வரி விகிதம் (ரூ) |
|---|---|---|
| 1 | ரூ 21000 வரை | இல்லை |
| 2 | ரூ21001 முதல் 30000வரை | 169 |
| 3 | ரூ 30001 முதல் 45000 வரை | 425 |
| 4 | ரூ 45001 முதல் 60000வரை | 844 |
| 5 | ரூ 60001 முதல் 75000வரை | 1250 |
| 6 | ரூ 75000க்கு மேல் | 1250 |

செயல்அலுவலர்
ஹைவேவிஸ் பேரூராட்சி
தேனி மாவட்டம்

**இணைப்பு**
படிவம் – 1

நகல் : தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.